528

Vadivelan = =

= = Anthathi.

வடிவேலன் அந்தாதி

அல்லது

கந்தபுராணக்கருப்பொருள்.

வி. சுப்பய்யர்,

இயற்றியது.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

ராஸ்.

---

919. [விலை அணா 4.

926:417
N19
178561

ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதிநூல்களையும் தனிப் பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பல நூல்களைத்தழுவியும், புலவர்களின் கர்ணபரம்பரையை அனுசரித்தும் இனிய எளிய வசன நடையில் இயற்றப்பட்டுள்ளது. சிறுவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்துகொள்ளக்கூடியது. வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது. விலை அணா 6.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவரபக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக்கவிஞருமாகிய காரைக்காலம்மை என்னும் புனிதவதியாரது இனியசரித்திரம். சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த பெரியபுராணத்தில் உள்ளபடி எளிய நல்ல வசன நடையில் இயற்றப்பட்டது. விலை அணா 1.

குகப்பெருமாள்.

ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் கங்கைப்படலம், குகப்படலம் என்னும் பாகங்களிற் பொருந்திய குகன் என்னும் வேடர் தலைவனது இனிய சரித்திரம். ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரோடும் இலக்குமணனோடும் பித்ருவாக்கிய மாதருவாக்கிய பரிபாலனத்தின்பொருட்டு அயோத்திநகரம் நீங்கிக் கங்கைக்கரையை அடைந்தவளவில், இனிய குணமுடையவனாகிய குகன் அவரைச் சந்தித்து நேயமிக்கதும், ஸ்ரீராமன் அவனை இனிதின் ஏற்றுத்தோழனென்றும், சகோதரனென்றும் பாராட்டி அன்புகூர்ந்ததும், ஸ்ரீராமபிரானைக் காணப் பரிவாரத்துடன் வந்த பரதனை அக்குகன் இராமனிடத்துக் கொண்ட கனிந்த அன்பினால் மாறுகக்கருதிப் போர்க்குச்சித்தனானதும், பின்பு அவன் பரதனை உள்ளபடி அறிந்துகொண்டு மனமுருகியதும் முதலிய விஷயங்கள் அடங்கிய சிறந்த கதையாகும். விலை அணா 3.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜ முதலி தெரு, மதராஸ்.

ஸ்ரீ

வடிவேலன் அந்தாதி

அல்லது

கந்தபுராணக் கருப்பொருள்.

வி. சுப்பையர்

இயற்றியது.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

வேலூர்.

காபி ரைட்] 1918. [விலை அணா 4.

சிறப்புப்பாயிரம்.

மேனாட்டு நாகரிகமோங்கி நடையுடைபாவனையனைத்தும் வேறுபட்டிருக்கும் இக்காலத்தின்கண் தமிழ்மொழியிலுண்மை யார்வமுற்றுத் தமிழ்ப்பயிற்சியையே பொழுதுபோக்காகக் கொண்ட மெய்யறிவினர் மிகச்சிலரேயாவர். அதனினும் தமிழ்க் கல்விக்குப் பெருந்தடையெனக் கருதப்படும் ஆங்கிலநூலுணர்ச்சி மிக்காருள் அத்தகைய மாண்பினரைக் காண்பது அருமையிலு மருமை. அரிதின் கிடைக்கப்பெறும் அன்னார்சிலருள் நம் நூலா சிரியராகிய பிரஹ்மஸ்ரீ சுப்பையரவர்களும் ஒருவராவர்.

2. இவர், தாய்மொழி தெலுங்கேயாயினும், தமிழ்ச்சுவை யினீடுபட்டு அவ்வாராவமுதினைப் பருகித் தாமுற்ற களிப்பை நம்மவரும் ஒருசிறிதனுபவித்து இன்புறுமாறு வெளிவந்துள்ள ஓர் புலவர்பெருந்தகை; சிலரையொப்ப இம்மையே பயக்கும் விட யங்களைத் தம்நூற்பொருளாகக் கொள்ளுதலை விடுத்து, இருமை யும் அளிக்கவல்ல இறைவன்திருவடிப்பெருமையை மேற்கொண் டது சாலச்சிறப்புடைத்தாம். அவ்விறைவனும் காலதேயத்தாற் சிறப்புற்ற கலியுகவரதரென்று யாவரானும் போற்றப்படும் குன்ற மெறிந்த குமரவேளேயாக, இந்நூல் தமிழ்மொழியுள்ளளவும் நிலை பெற்று அம்முருகன்புகழேபோல் மேன்மேற் பரவுமென்பதற்கு ஒருசிறிதுமையமின்று.

3. பொதுவில் கவியை ஓவியத்துறை கைபோய ஒருவனுக் கொப்பிடுதல் ஆன்றோர்மரபு. ஓவியன் இயற்கைநலம் சிறிதும் மாறுபடாவண்ணம் சித்திரித்துக் காண்போர்மனத்தை உருவின் கண் இரமிக்கச்செய்து பரவசமாக்கல்போற் கவியும் கற்போரு ளத்தைக் கவர்ந்து பேரின்பத்துள் திளைக்கச்செய்தல் வெளிப் படை. இதுவே நூலாராய்ச்சிக்கேற்ற உரைகல்லாகும். இதனைக் கொண்டாராயப்புகின், அநேகநூல்கள் போலியாய்முடியும்; மாற்றுவிடாதிருப்பன ஒருசிலவேயாம். அவற்றுள் இந்நூலு மொன்றெனச் சொல்லத் தடை யாதுமிலது. இக்கருத்துற்றே

திருவருணையிலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இரமணாநந்தமுனிபுங்கவரும் தம்முன்னிலையில் இந்நூலைப் படிக்கக்கேட்டு வெளியிட உத்தரவளித்தனர்போலும்! இதுநோக்கியே தமிழ்ப்பண்டிதருட் சிலரும் இதனை வெளிப்படுத்த நூலாசிரியருக்கு ஊக்கமளித்துதவினர்போலும்!

4. இந்நூற்றொடக்கத்தில் **முருகக்கடவுளது** திருமேனி மிகுஅழகாக வர்ணிக்கப்பட்டுளது. அவரது அறுமாமுகங்களும் பன்னிருதிருக்கரங்களும் அருட்பாக்களாகிய **திருப்புகழ், திருமுருகாற்றுப்படையிற்** கூறியாங்கே செவ்வனே படிப்போர்மனத்திற் பதியும்வண்ணம் புனைந்துரைக்கப்பட்டுள்ளன. நூலிடைகடையினும் எப்புராணத்தினும் சிறந்த கந்தபுராணத்தின் கதையே சிறியவாடியிற் பெரிய மால்வரைப்பொருள் செறிந்தாங்கு மிகச் சுருக்கித் தெளிவாக விளக்கப்பட்டுளது. கந்தமும் திருப்புசழும் கடல்போற் பரந்துகிடத்தலின், கற்போர்க்கவகாசமின்மையானும் திருமுருகாற்றுப்படையும் கடிய நடை வாய்ந்து இலக்கணவிலக்கியவாராய்ச்சி மிகுந்த பண்டிதர்சிலர்க்கேயன்றி ஏனையோர்க்குப் பயன்படுதலிலாமையானும், இவ்வுலகவாழ்க்கையில் மொத்துண்டுழலுமெம்மனோர்க்கும், பாமரசனங்கட்கும், பள்ளிமாணவர்பலர்க்கும் இந்நூலே மேற்சொல்லியவைகளின் எற்புடையதொன்றாகும்.

5. தமிழ்மொழிவளர்ச்சியினைக் கருதிய தமிழ்மக்களுக்குத் தலையாயவர் கடமையிரண்டென மேலோர் வகுத்தனர். அவைதாம் பழம்பணிபுதுக்கலும், புதுப்பணிகுயிற்றலுமாகும். விளங்கச் சொல்லின், அவ்விரண்டும் பண்டையநூலாய்ந்து செப்பனிடுதல், புதுநூலியற்றுதல் எனப் பொருள்படும். இவ்விருவகையூழியத்தின் மிகச்சிறந்த பிந்தியதொன்றை நம் நூலாசிரியர் கைக்கொண்டு, தமிழுலகிற்குப் பேருபகாரமாக இந்நூல் யாத்து வெளிப்படுத்தியது, நாம் செய்த தவப்பயனேயாகும். மேன்மேலும் இத்தகைய நூல்களியற்றி எஞ்சாப்புகழ்படைக்க இவர்க்கு நீடித்தவாயுளும் நிறைவுற்றவாழ்வும் இறைவன் இன்னருள் புரிவானாக.

இங்ஙனம்:

கே. கிருஷ்ணய்யர்.

முகவுரை.

நேரிசையாசிரியப்பா.

பால வயதிற் பாருள வெறுத்துச்
சீல முடனே செய்திடு தவம்பல
திரண்டே யுருவாய்த் திகழொளி தந்திட
விரண்டே யிலையெனு மறிவது விளங்கிப்
புவியினி லுள்ளோர் புனிதமே யடையக்

குவித்த பேரெழிற் குன்றென வமர்ந்தே
கண்டோ ருள்ளங் கசிந்துள் ளுருகப்
பண்டே செய்த பழவினை யகற்றி
யகில நாதனு மரனடி தனக்கே
விகித முடைய மேனிலை கொடுக்க

அண்ணா மலையி லழகுறச் சேர்ந்தோர்
கண்போல் நிற்குங் கண்ணிய ரமண
மகரிஷி பாத மலரிணை
யகத்தி னினைந்தோ ரடைவது நலமே.

இவ்வுலகின்கண் என்போலியர் உய்ந்திடக் கருதித், திருவருள்சுரந்து, என்னப்பன் வேலாயுதன் சிற்சில காலங்களிற் சிலமஹாத்துமாக்களைப் பிறக்கச் செய்வதுண்டென்பது, ஆன்றோர்துணிபு. அம்மாஹான்கள் அநேகவருடங்களுக்கோர்தரம் இங்குவந்து நம்மை நல்வழிப்படுத்துமாறு தாங்களே தவம்புரிந்து நமக்கு ஓர் விளக்கமாக வாழ்வார்களென்பது சாஸ்திரசம்மதம். அங்ஙனம் வாழ்பவர்களுட் சிலரே நமக்குச் சாதாரணமாய்ப் புலப்படுவார்களென்பதும், பலரை நாம் காணல்முடியாதென்பதும், வேறுசிலரை நாம் கண்டாலும் தெரிந்துகொள்ளக்கூடாத நிலையில் அவர்களிருப்பார்களென்பதும், அநேகர்

அறிந்திருத்தல்கூடும். அங்ஙனமின்றி, நாம்கண்டதும் அறியக்கூடியவர்களாகவும், ஆவலுள்ளவர்கள் சென்றுபார்க்கக்கூடியவர்களாகவும் இருப்பவர்கள் அருமை. அவ்வருமையாளர்களில் ஒருவர் திருவண்ணாமலையின் கீழ்ச்சாரலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ரமண மகரிஷியெனப்படும் மஹாத்துமாவாவர். அச்சந்நிதானத்தை அடைந்தவர்கள் பெற்றிடும் சாந்தியை, அனுபவித்தவர்கள் உணருவார்களேயன்றி, மற்றவர் உணர்தல் முடியாது; இங்கெழுதுதலுமியலாது.

வடிவேலனந்தாதி அல்லது கந்தபுராணக் கருப்பொருளென்னும் இச்சிறுநூலை நானெழுதிய பின்பு எனது தமிழ்ச்செய்யுளிலக்கண வாசிரியர்க்கும், எனது கீர்த்தியையும் க்ஷேமத்தையுங் கருதியவராயுள்ள வேறொரு மஹாவித்வானுக்குங் காட்டிவிட்டு, அச்சுக்குக் கொடுப்பதாகத் தீர்மானஞ்செய்தேன்; அவர்களிருவரும் பார்த்து முடிந்ததும், இங்குள்ள சிற்சில நண்பர்களிடமும், ஓர் மஹானிடமும் படித்துக்காட்ட, அவர்களெல்லோரும் "நீ முதலில் திருவண்ணாமலைக்குச் சென்று, அங்குள்ள மகரிஷியவர்களிடம் படித்துக்காட்டிவிட்டு, பிறகு இந்நூலை வெளியிடுவாயாக" என்று கட்டளையிட்டனர். தமியேன் அதனைச் சிரமேற்கொண்டு, 1918-ம்௵ மே௴ 2௳ மகரிஷியவர்களைத் தரிசனஞ்செய்து, அவர்கள் சந்நிதானத்தில் இந்நூலை அடிமுதல் அந்தம்வரை படித்துக்காட்ட, அம்மஹாத்துமா ஆங்காங்குத் தாம் ஆமோதித்ததைச் சிலகுறிப்புக்களால் தெரிவித்தார்; மேலும், பிரமனைச் சிறைகொண்ட வைபவம் இந்நூலிற் சொல்லப்பட்டது கந்தபுராணத்தினின்றுஞ் சற்று வித்தியாசமாக இருப்பினும், அழகாகவே அமைந்துளது என்றும், அந்தாதிபாடுபவர்கள் வெண்பா அல்லது கட்டளைக்கலித்துறையாகப் பாடுவது வழக்கமாயினும், கலிப்பாவாகப் பாடியதுஞ் சரியேயென்றும், கந்தபுராணத்தையே சுருக்கிச் சொன்னதும் அழகேயென்றும் திருவாய்மலர்ந்தருளினர். அன்றே இந்நூலை அங்குள்ள திருப்புகழ்பாடிய சந்நிதியிலும் ஒருதரம் வாசித்துக் களிப்புற்றேன்; பிறகு, அம்மாதம் 15௳யன்று திருமலையிலுள்ள என்னப்பன் சந்நிதியிலும் ஓர் தரம் படனஞ்செய்து மனமுவந்தேன்.

இந்நூலை, இவ்வூருக்கு ஸ்ரீமத்விவேகாநந்தநிலயத்தார் செய்த திருவிழாவுக்காக வந்திருந்த ம-ா-ா-ஸ்ரீ கோ. வடிவேலுசெட்டியாரவர்களின் தூண்டுதலுக்கு உடன்பட்டு எழுதத்துணிந்தேன். அவர்களுக்கும், இந்நூலை நான் இயற்றுங்காலத்திலும் இயற்றி முடித்தபின்பும் பிழைதிருத்தியருளிய பிரஹ்மஸ்ரீ பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்களுக்கும், ம-ா-ா-ஸ்ரீ ம. சி. சபாபதி முதலியாரவர்களுக்கும் என்றுங் கடமைப்பட்டவனாயிருக்கிறேன்.

இதனை வெளியிட முன்வந்த [Messrs. V. N. Sama Rao & Co.,] ம-ா-ா-ஸ்ரீ V. N. சாமராவ் கம்பெனியாருக்கு நான் மிக்க நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

எல்லாம்வல்ல வடிவேலன் எல்லோர்க்கும் அருள்வெள்ளந் தேக்குவான் என்னும் நம்பிக்கையுடன் இதனை வெளியிடத் துணிந்தனன்.

V. SUBBIAH.

சுபம், சுபம், சுபம்.

V. N. சாமராவ் அண்டு கம்பெனியாரின்

பிரசுரங்கள்.

1. ஔவை 0 6 0

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதிநூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம்.

2. காரைக்காலம்மை சரிதை 0 1 0

கற்பிலும் ஈசுவரபக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக்கவிஞருமாகிய காரைக்காலம்மை என்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

3. குகப்பெருமாள் 0 3 0

இது, ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் உள்ள அயோத்தியாகாண்டத்தில் அடங்கிய 'கங்கைப்படலம்', 'குகப்படலம்' என்னும் பாகங்களிற் பொருந்திய குகன் என்னும் வேடர் தலைவனது இனிய சரித்திரம்.

4. சீதை வனம்புகுந்த சரிதம் ... 0 3 0

கம்பராமாயணத்தில் இறுதியிலிருப்பதும், உத்தம கவியாகிய ஒட்டக்கூத்தப் புலவர் பாடியருளிய உத்தர காண்டத்தில் உள்ளதுமான 'சீதை வனம்புகுபடலம்' என்னும்பாகத்தில் அடங்கிய சரித்திரத்தை எளிய வசன நடையில் வெளியிடும் நூல்.

5. வடிவேலன் அந்தாதி அல்லது கந்த புராணக் கருப்பொருள் 0 4 0

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

வேலூர். (தென்னிந்தியா.)

உ

குருப்யோ நம:

வடிவேலன் அந்தாதி

அல்லது

கந்தபுராணக் கருப்பொருள்.

காப்பு : குறள்வெண்பா.

வேலவனைப் பாடியே வேலின்பாற் சார்ந்தவரைக்
காலன் கவரானே காண்.

நூல்.

தரவு கொச்சகக் கலிப்பா.

1. வடிவேல னென்றுசொல வரமளிக்கு மாமணியே,
சடிலநதி தலையணிந்த சங்கரனார் குருமணியே,
துடியிடையார் பார்வதியின் சோதியுள கண்மணியே,
இடர்நீக்கிக் காத்தருளு மிளங்களிற்றி னிதமணியே.

2. இதமணியை யிதயமல ரினிதிருத்தி வாழ்வோர்கள்
பதவிபெற மிகமகிழும் பரமனருட் சேயன்றே?
அதஞ்செயவே யரக்கர்களை யன்றுதித்த விறல்வீரா,
சதநினைந்து சகம்வாழத் தந்திடுநின் னருளினிதே.

3. அருள்வெள்ளந் தான்பொழியு மப்பனது சடையி
[ழிந்து
தருபல்வே நிறைந்துவளர் தண்ணிமய கிரிநடுவில்
திருவருளாற் றிரிந்துலவு சீர்க்கங்கை நதியினது
பெரும்புகழே மிகவுன்னப் பிறந்தனையே யதன்
[சுனையில்.

4. சுனைநடுவி லறுகுழவி சுற்றிவிளை யாடல்கண்டு
மனவெழுச்சி மிகவடைந்த மாதேவி யங்குவந்து
தனமணைத்துத் தன்முலைப்பால் தந்திடவு மகமகிழ்ந்து
தனைநிகர்வோர் சகமதனி லின்றிவளரா றுமுகா.

5. ஆறுமுகத் தொன்று *கொண்டே யடியார்வினை தீர்த்
தருள்வை, ஏறுமயி லேறிநிலங் காத்தருள்வை
யொன்றுகொண்டு, மாறுபடு சூரரையே வதைத்தருள
வந்ததொன்று, கூரியவேல் குன்றுருவ வாங்கவந்த
தொருமுகமே.

6. ஒருமுகமே யொண்டொடியாள் வள்ளியினை மணந்
ததுவோ !, ஒருமுகமே யும்பருடன் ஞானமொழி
பேசினதோ !, திருவுருவ எழுநூறு தினகரனி னொளி
வாய்ந்தோய், இருவாறு கரங்களுக்கே வென்தொழி
லோ செப்பிடுவோம்.

7. செப்பிடிலோ வக்கரத்திற் ‡ செம்மையுட னென்று
கொண்டு, தப்புதலி லாதுதவந் தான்புரிந்து விண்ணுல
வும், ஒப்புயர்வி லாதபெரு மிருடிகளை யுய்ந்திடவே
இப்பொழுது மேந்திநின்று காத்தருளு
மிறையோனே.

---

* முருகக்கடவுளின் ஆறுமுகங்களில் ஒவ்வொன்றின் சிறப்பும் விவரிக்கப்படுதல் காண்க ; இஃது அருணகிரிநாதர் திருப்புகழை அநுசரித்துள்ளது.

‡ குமாரக்கடவுளின் பன்னிருகரங்களில் ஒவ்வொன்றின் சிறப்பும் விவரிக்கப்படுகிறது ; இது நக்கீரரது திருமுருகாற்றுப் படையிற் கூறப்பட்டதைப் பெரும்பான்மையும் தழுவியது.

8. இறையோனே யதற்கிணையை யெழில்மருங்கிற் சேர்த் தனையே, துரையேநீ தோட்டிகொண்டு தும்பியினைச் செலுத்திடவே, மறைபோற்று மொருகையே வண்மை யுடன் விளங்கியதே, நிறஞ்செய்ய வாடையின்மே னின்றதுவே யொருகரமே.

9. ஒருகரமே யொளிவீசி யுள்ளறிவு தனைவிளக்கித் திருவேற்றுந் திறமையுடைச் செம்பொனெடுங் கதிர் வேலைத், தரித்துவந் துவலமாகத் தாராள மாய்ச்சுற்றப் பிறிதொருகை பரிசுடனே பிறங்கிநின்று சுழன்றதுவே

10. சுழன்றுவரு பிறவிநோய் தொலைந்திடநல் வழியுணரப் பழமையுறு மந்திரத்தைப் பலமுனிவர்க் கெடுத்து ரைக்க, வழகுடனே யொருகையும் மணியார்பி லமர்ந் துறைய, வெழில்பெருகு மிங்கிதனே, உனையொத்த குருவுளரோ ?

11. குருபரனே குணமின்றி நினையெதிர்ந்து மடிந்தவர்கள் குருதியொடு நிணமூளை குலைபலவும் வேகவைத்துப் பெரிதாய களவேள்வி பிழையாது நடத்திடவே சரியான தருணமதி லுயர்ந்துனது விடையளிக்கும்.

12. விடையளிக்கு மக்கரமே விண்ணோக்கி மிகவிளங்க, மடமையுள மாந்தர்களின் மனமதனைக் குளிரவைத்தே இடர்பலவு மறநீக்க வினிதாக வொலிக்கின்ற, அடலேறே! அரைமணியை யசைத்திடுமே யொரு கையே.

13. ஒருகையே யுலகினிடை யுள்ளவர்க ளுய்ந்திடவே தருமாரி மேகங்கள் தப்பிடலைத் தடைசெய்து பருமாரி பொழிந்தேநற் பலன்பலவு முண்டாக்கக் கருவுடைய கார்களையே யாண்டிடுமே யழகுடனே.

14. அழகென்று சொல்லுவதோ வன்புடைய குறமகளைப் பழவினையே செயப்பணிக்கும் பற்றென்று பகருவதோ? உழல்கின்ற பேதையரி னுயிர்காக்குந் தண்ணிழலோ? சுழல்கொண்டு போகாதே தூக்கரினை மாலுமியோ?

15. மாலுமிபோல் மரக்கலத்தை நடத்தவல்ல மாலுலகாள் ஏலுகின்ற பணிகளையே யேக்கமின்றிச் செயவருள்வாள், ஆலவட்ட மிரண்டொத்த வகன்றபெருங் கண்ணுடையாள், ஞாலமுழு துங்காக்கும் நாயகனின் பக்கமுளான்.

16. பக்கமுள மகிமைதழை பைந்தொடிய ரிருவரையும் எக்கணமு மெழிலுடனே யினிதாக வணங்குநிற்கத் திக்குவிச யஞ்செய்து சிறந்திட்ட சீராளா தக்கதென விருகரங்கள் வாய்ந்தனவே தன்னியனே.

17. தன்னியனே நீயுதித்துத் தண்ணருளைப் பெறவென்றே ஒன்னலரா யிவ்வுலகி லுன்முன்பே தோன்றிநின்ற பன்மையிதழ் மலர்வாழும் பரமனது பேரரெனுந் துன்புவிளை சூரபத்மர் தொடர்ந்தொன்றாய் வதிந்தனரே.

18. வதிந்தவர்க ளரனடியை யன்புடனே மனத்திருத்திப் பதிந்திருந்து பலகாலம் பண்புடனே தவமியற்றி இதமாக விறைவனடி சேரவரங் கேளாது சதவாழ்வுஞ் சத்துருவை யடன்முறையும் நாடினரே.

19. நாடினரே நல்லோரை வருத்திடவே பலவழிகள் வேடினரே வீணான வரங்கணக்கி லில்லாது மோடிகொடு முன்னெதிர்ப்போர் பலம்பாதி தமதென்றே, ஆடினரே யதைப்பெற்று மானந்தங் கொண்டனரே.

20. கொண்டனர்கை புவிதனிலே குணம்வாய்ந்த முனிவர்
களை, விண்டனர்க ளவர்செய்யும் வெற்றியுறு நற்றவத்
தைத், தண்டனைக ளவர்களுக்கே தடையின்றி மிகவிதித்
துப், பண்டுவந்த பாவியர்போற் பார்நடுங்கப் பிழைத்
தனரே.

21. பிழைத்தவர்க ளிப்புவியிற் பெருங்காலம் வாழ்வது
போல், தழைத்தனரே தம்மினத்தர் பலங்கொண்டு
மிகப்பெருக, உழைத்தனரே யுலகெல்லாந் தமதாணைக்
குட்கொணர, இழைத்திடுக்கண் நகைபுரிந்து மெழி
லுடனே விளங்கினரே.

22. விளங்கியநீ வீரருடன் நன்றாகச் சமர்புரியத்
தளம்பலவே தேவர்களுந் தகைமையுடன் தாந்தந்தார்
களந்தனிலே காதகரைக் கடிந்துநின்று வெற்றிகொளக்
களந்தனிலே கறையுடையோன் பங்கினளும் வேல்
தந்தாள்.

23. வேலென்று சொலுமந்த வியப்படையின் கீர்த்தி
யினை, மாலென்று சொலப்படுமுன் மாமனுமே யறி
யானே, காலென்று சொல்லுவதோ வதன்வேகக் கதி
தனையே ? ஆலென்று காத்திடுமே யதனடியி லடைந்த
வரை.

24. அடைந்தவரை யன்புகொண்டே யாதரிக்கு மவ்
வேலே; மடமையெனு மஞ்ஞான விருடனையே மாற்றி
நல்ல, திடமனதுந் தெளிவுமிகு மறிவதுவுந் தான்
கொடுத்துக், கடமைகட வாதுநின்று காத்தருளுங்
கதிர்வேலே.

25. கதிர்வேலைக் கைப்பிடித்துக் கடுகிவருங் கார்த்திகையா,
கதியளித்து மனமகிழுங் கண்ணபிரான் திருமருகா,
விதிதனையும் வென்றிடவே வழிகாட்டும் வேன்முருகா,
பதியான சீரலைவாய் பதிந்திருக்கும் பரம்பொருளே.

26. பரம்பொருளே பரங்குன்றத் தமர்ந்துவளர் பெருமானே, வரம்பலவும் வழங்கிடவே மயிலையுறை மணவாளா, சரம்பலரே சாத்தமகிழ் தணிகைவளர் தன்னியனே, உரந்தரவே யொற்றியுறை யொண்பொருளே கண்மணியே.

27. கண்மணிபோற் கதிர்காமந் தழைத்திடவே கருதியவா,
பெண்மணிக ளிருவருள பெரும்பற்றப் புலியூரா
தண்ணிழலே தவறாத பழனிமலை தனில்வாழ்வாய்
எண்ணியவை கொடுத்தருளு மேரகத்தி னிங்கிதனே.

28. இங்கிதமா யுதிர்சோலை யெழிலுடனே நின்றவனே,
சங்கிதமே மிகநிறைந்த தஞ்சைநகர் தழைத்தவனே,
பொங்கிவரு மலையுண்ட கார்பலவும் பொழிந்திடவே
எங்குமிசை வளர்புனித வெழிலண்ணு மலைவாழ்வே.

29. மலையென்று நினைந்தவர்க்கே வாழ்வளிக்கும் வேங்கடமாந், தலந்தனிலே தங்கியுன தருள்தழைக்க வரமளிப்போய், சொலலரிதே யுன்புகழைச் சுவாமிமலை வதிந்தவனே, சலந்தனிலே வாழுகின்ற தண்குறுக்குத் துறைத்துரையே.

30. துறைபாடுங் கவிகளைநீ துரிதமுட னேகாப்பாய்
மறைநான்கு மகிழ்ந்தளித்த மலரவற்கும் முனமொருநாள், கறைதனையே கண்டமதி லடக்கியுள சங்கரர்க்குந், திறமுடனே பிரணவத்தைத் தெளியவைத்த தற்பரனே.

31. தற்பரனே நினதடியைத் தஞ்சமென்றே யடையாமல்
நிற்பதுவீ ணெனுநினைவை நித்தியமாய்ப் புவியடையப்
பற்பலவா யுளபணிகள் பண்புடனே பலவியற்றிப்
பொற்புறவே தழைத்துநின்ற புனிதமிகு சுரர்வேந்தே.

32. சுரர்வேந்தே சூரபத்ம ரிழைத்திடுந்தீக் கேடறிந்து
துரிதமுட னவர்தமையே தொலைத்தருள மனங்
கொண்டு, பரமனைநேர் தலைவணங்கிப் பார்வதியி னருள்
பெற்றுத், துரகமதின் மீதேறிச் சொலித்திடவே நடந்
தனையே.

33. நடந்தகொடும் போர்தனையே நான்விரிக்கவல்லேனோ?
அடர்ந்துவருஞ் சேனைகளி னளவினுக்குங் கணக்குள
தோ? தொடர்ந்துவருஞ் சுரர்சேனை வீரத்திற் கீடுள
தோ? படம்பலவின் புகழதனைப் பாடவெனின் முடி
யுமதோ?

34. முடிந்திடுமோ விக்கொடும்போ ரெனமுனிவர் நடு
நடுங்கத், தடந்தோளிற் றங்குபடை வீரர்களு மெதிர்
ந்துநின்றார், படந்தனிலே பார்தாங்கும் பாம்பதுவும்
பதைத்திடவே, இடியேறே யார்த்ததுபோ லிருவர்
கையுங் கலந்தனவே.

35. கலந்தனவே கங்கைவந்து கடல்தனையே யடைவது
போல், தலமுழுதுந் தகர்ந்ததெனப் பேரொலியும்
விளைந்ததுவே, நிலம்வழங்க வித்தரையிற் சிறுவர்களும்
வறிதாகப், பலங்கொண்ட பகைவர்தலை பாரிடத்தே
புரண்டனவே.

36. புரண்டனவே புயம்பலவு மிழிந்ததுவே குருதிவெள்ளம்
வரம்பொன்று மில்லாது வழிந்தோடிப் பெருகினதே
சரம்பலவே தம்மார்பில் தைத்திடவல் லிராக்கதரும்
திரங்குலைந்து திகைத்தவராய்த் தென்னவனைக் கண்ட
னரே.

37. கண்டனரே தந்தசையைக் கழுகலகை யுண்ணுவதைத்
துண்டமடை தந்தமரைச் சுடுகாடே கொள்ளுவதைத்
திண்டோளின் வலிமையெலாந் திரணமென்று போ
குமதைச், சண்டைதனிற் சத்தியமே யெந்நாளுந்
தழைப்பதையே.

38. தழைவாய்ந்த தருக்கள்மிசைச் செங்குருதி பாய்ந்தது
வே, யழல்கொண்டே யங்குள்ள நீர்நிலைகள் வறண்
டனவே, எழுந்துவந்த தினகரனு மேக்கமுற்று நின்
றனனே, பழவினையே யெனத்துணிந்து பகைவர்களு
மடிந்தனரே.

39. மடிந்தனரே மாற்றலர்க ளோர்கணக்கி லில்லாது,
இடிந்ததுவே சூரனொடு பதுமனிரு வரின்மனமும்,
தடந்தோளின் வலிகொண்டு தாங்கள்வெல முடியாது
மடமையுள விருவருமே மாமரமாய் மாறினரே.

40. மாறினதை யுடனுணர்ந்த வானவரி னருமருந்தே
ஊறுசெயு மிருவரையு மொழித்திடவே யுண்ணி
னைந்தே, ஈறுவந்த தினிநீவி ரெப்படியும் மடிவிரெனக்,
கூறியொளிர் கைவேலைக் குணமுடனே விடுத்தனையே.

41. விடுத்ததிரு வேல்சென்று விண்ணோரு மிகவியக்கத்
தடித்ததொரு மரத்தினையே தாக்கியுடன் தகர்த்
ததுவே, நொடிக்கணத்தி லவ்வரக்கர் நுகர்மயிலுஞ்
சேவலுமாய்க், கடிக்கவென மனங்கொண்டு கண்ட
வனைச் சூழ்ந்தனரே.

42. உனைச்சூழ்ந்த மயிலாய சூரனதாற் றலையடக்கிக் கனம்பெருகு வாகனமாய்க் கைக்கொண்டா யவன் றனையே, தினவரவைத் தெரிவிக்குங் கோழியெனும் பதுமனையோ, தினகரனே யுன்கொடியிற் றிறமுடனே யமைத்தனையே.

43. அமைத்தவுட னமரர்களும் மலர்பலவுந் தூவினின்றார், தமைநிகர்வோ ரில்லாது தழைத்தனவே நின்படைகள், இமயமலை தனில்வாழு மீச்சுரனும் வியப்படைந்தான், சமரசம்வாய் பத்தர்களுஞ் சாத்தினரே துதிமாலை.

44. துதிமாலை தனையணிந்த தோள்வலியை யெடுத்துரைக் கப், பதுமமலர் வாழ்கின்ற பிரமனொடு பாரதியும், மதமலையி னிடர்தீர்த்து மகிழ்ந்துகதி யளித்தவனும் இதவாழ்வே தருகின்ற விலக்குமியும் பார்வதியும்,

45. பார்வதியும் பரமனது திருச்சடையி னின்றிழிந்து பார்புகழப் பகிரதன்றன் துயரமதைத் தீர்த்தவளும் சீர்மதியைச் சூடிநின்று திகழ்கின்ற பரம்பொருளும் தார்வேந்தும் பற்பலருந் தாரணியை நாடினரே.

46. நாடினரே நன்மைகளை விளைவித்த வுன்னிடமே பாடினரே பலவேறு பாக்களுட னுன்புகழைச் சூடினரே தோள்களிலே வனப்புமிகு தொடைபலவே யாடினரே யானந்த மதிகரித்து வியந்தனரே.

47. வியந்தனரே நின்கரத்தில் விளங்குமெழில் வேல் தனையே, பயந்தனரே நீயடைந்த பறவைகண்முன் வருவதற்கே, கயந்தனிலே கண்வளர்ந்த கண்மணியே யெனப்புகழ்ந்து, சயந்தனையே தானடைந்த சண்முகனே யெனத்துதித்தார்.

48. துதித்தனரே நின்குணத்தைத் துரிதமுட னங்கிருந்து,
குதித்தனரே குவலயத்தோர் கண்டுகளி கூர்ந்திடவே
விதித்தனரே விண்ணவரின் வேந்தனிவன் றானென்று
பதித்தனரே தம்மனத்திற் பயிலவொளி ராறெழுத்தை.

49. ஆறெழுத்துங் கைக்கொண்டே யகந்தையினை யகற்றிட
லால், தாரணியிற் றனைநிகர்வோ ரிலையென்றே வாழ்ந்
திடலாம், பேரவையின் முன்னின்றே பெரும்புகழும்
பெற்றிடலாம், வீரமுட னெதிர்ந்துவரு பகைவரையும்
வென்றிடலாம்.

50. வென்றிடலாஞ் சீறிவரு விலங்கினத்தை யெளிதாக
நன்றிமிகு நல்லோரை நலமுறவே செய்திடலாம்
நின்றிடலாந் தம்மனமே நிலையினின்று பிறழாது
மன்றினட மாடுகின்ற மன்னவனி னருள்பெறலாம்.

51. அருள்தனையே யளித்துவக்கு மன்புடைய சுரர்வேந்தே
மருள்வந்து மூடுகின்ற மனமுடைய வென்றலையில்
திருவடியைச் சேரவைத்துச் சித்தமது மிகவுவந்து
பெருவாழ்வு பெற்றிடவே வரமளிப்பை பெரியோனே.

52. பெரியோனே நீவென்ற பெரும்போரை மிகவியந்து
திருவருளாற் செழித்தோங்கு தேவர்களி னதிபதியுந்
திருநிகரா வெழில்வாய்ந்த தெய்வானை தனையுனக்குத்
தருவதெனத் தன்மனத்திற் றேர்ந்தனனே சுரர்புகழ.

53. சுரர்புகழுந் திறம்வாய்ந்த துடியிடையை நீமணக்கப்
பரமனொடு பார்வதியுந் தம்மருளைத் தந்துவந்தார்
புரமுழுதும் பூமாலை யழகாகப் புனைந்துதயா
பரருவக்க வுன்றனக்குப் பரிந்தளித்தா னவள்தனையே.

54. அவள் தனையே மணமாலை யன்புடனே சூட்டிநிற்கத் தவமகிமை மிகவாய்ந்த தன்யருனைத் தொழுதெழுந் தார், பவவினையைப் பாரினின்று பறக்கடித்த பரம னென்று, கவிஞர்பலர் கூடிநின்று கண்யவுனைப் புகழ்ந் தனரே.

55. புகழுடனே வாழுகின்ற புனிதமிகு சேவகனே
சகமுழுதுந் தந்தருளும் பிரமனொரு நாட்காண
அகவிழைவா லப்போரை யெடுத்துரைத்து விளக்கு கையில், இகபரத்தி லிவ்வேலுக் கிணையில்லை யென மகிழ்ந்தாய்.

56. மகிழ்ந்ததனை மலர்வாழுஞ் சதுமுகனுஞ் செவியுற்றுத்
தகுந்ததுவே யதன்புகழைச் சரிவரநீ பேசினையே
மகிதனிலே மற்றவர்க ளடையாத விவ்வேலை
அகமகிழ்ந்து நானலவோ வாக்கியது மெனவுரைத் தான்.

57. உரைத்தவுட னுள்ளமது பொங்கிடநீ முனிந்துபுரம்
எரித்தவுன்றன் தந்தையைப்போ லார்ப்பரித்தே யெழுந்துநின்று, பெருத்தபுகழ் வாய்ந்துள்ள பிரமரே நீர் பிரணவத்தின், அருத்தமதை யடியேனுக் கறிவியு மென் றேகேட்டாய்.

58. கேட்டவுட னன்னோனுங் கிலிகொண்டு கலங்கிடவே, மேட்டிமையே மிகவாய்ந்த வுன்றனக்கே யென்வலி யைக், காட்டுகிறே னெனவுரைத்துத் தேவர்களுங் கலங்கிடவே, வீட்டினின்று வெளியாக்கி யனுப்பி னையே பூமியிடம்.

59. பூமியிடம் பிரமனுமே வேலையற்றுப் பொருமியுறச்
சாமியுடன் தாரணியின் முத்தொழிலுங் கைக்
கொண்டாய், நேமிகொண்டு தருமத்தை நிலைநிறுத்து
நாரணனுங், காமியமுந் தந்தருளுங் கடவுளருங் கவ
லையுற்றுர்.

60. கவலையுற்ற விருவருமே யுன்னிடத்தே கடுகிவந்து
தவறுசெய்த பிரமனது தண்டனையை மாற்றுகென்ன
அவர்தமையு மோங்காரப் பொருள்தனையே யறையு
மெனச், சுவர்தனிலே யோவியம்போற் சொல்லிழந்து
திகைத்தனரே.

61. திகைத்தவரை முன்னேக்கிச் சிரிப்புடனே பரிதபித்தே
அகத்துயரா ரயன்றனையு மக்கணமே வரவழைத்துச்
சகத்தினிலே முத்தொழிலுஞ் செய்துவருத் தங்களுக்
கே, வகுத்திரைப்பே னேரெழுத்தை வகையுடனே
யென்று சொல்லி,

62. என்றுசொல்லி யெழிலுடனே குருவாக வங்கிருந்து
நன்றுசெயும் நாயகர்க்கு நயமுடனே போதித்து
வென்றியுடன் முகமலர விண்ணோரு மிகப்புகழ,
அன்றைக்கே யவர்களதா மாளுகையை யளித்து
வந்தாய்.

63. உவப்புடனே வுலகுய்ய வொண்டொடியா ளுடன்கூடிக்
கவலையற்ற கன்றதுபோற் கண்ணியமாய் வாழுகையில்
தவப்புருடன் மூவுலகுஞ் சஞ்சரிக்கும் நாரதனும்
அவிழ்த்தனனே யுன்னிடமோ ராச்சரியப் புதுமையினை.

64. புதுமையென்று சொல்லுவனோ புனிதமிகு சூரர்கோனே பதுமையென்று பகருவதோ பண்புடைய பெண்மணியைச், சதுமறையுஞ் சாற்றிடவே வல்லதுவோ அவளழகைப், பொதுநடஞ்செய் புண்ணியனும் புகழுவனே யவள்தனையே.

65. அவள்தனைத்தாம் கண்டவர்க ளகந்தனையே கொள்ளுவளே, தவமகிமை யுற்றவருந் தந்நெறியை மறந்திடுவர் அவனிமிசை யரசர்களு மடையவொணு வற்புதமே கவலையுற்ற மாந்தர்களுங் கண்டிடிலே களிகூர்வர்.

66. களிகூர்ந்தே கண்ணப்பன் மரபினிலே வளருமவள் ஒளிவீசி யுளமுவந்து கானகத்தி லுறைகின்றாள். தளிர்பலவு மவள்தாளின் தன்மையினை யடையாதே உளங்கருகி யொளியிழந்து தம்மேனி சிவந்துநின்ற.

67. சிவந்தவவ ளதரமதின் சிறப்பினையே சொலப்படுமோ? பவந்துடைக்கும் பார்வையினைப் பகருவது மெளிதாமோ?, தவளநிறச் சந்திரனைப் பழித்துநிற்கு முகந்தனையே, தவந்தனிலே மனஞ்சென்ற தமியனெடுத் துரைப்பேனோ?

68. உரைப்பதுவோ வுலகுவக்குங் கண்டமதின் பேரழகைத், தரைபுகழ வளர்ந்துநின்ற தனங்களவை நெருங்கிணையைத், துரைநீயுந் தெரியவொணுத் துவளிடையின்புகழ்தனையே, பரையுமையும் வியக்கவரு பாதமலர்நேர்மையினை.

69. நேர்மையுட னின்றனையே நித்தியமும் வேண்டுகின்ருள்கார்போன்று கறுத்துவளர் கூந்தலுடைப் பிறைநுதலாள், தார்வேந்த ரானவவள் தமையருமே நிதிபோன்று, பார்தனிலே பகலவனுங் காணுது காக்கின்ருர்.

70. காக்கின்ற கற்பகத்தைக் காங்கேயா நீசென்று
தூக்கிவந்து மணமாலை துரிதமுட னிடுவையென்று
வாக்குமன மெட்டாத வண்டவத்தோ னுரைத்திட
லும், ஊக்கமது கொண்டனையே யொண்டொடியாள்
தனைக்காண.

71. காணவென்றே யோர்வேடங் கணக்காகக் கொண்ட
னையே, நாணமற்று நரைமயிரைத் தலைமுழுதுந் தாங்
கினையே!, பேணவரு மொருவரிலாப் பிச்சைகொளுங்
கிழவனைப்போல், ஏணமது தந்துவந்த வேந்திழையின்
முன்னடைந்தாய்.

72. அடைந்தவொரு விருத்தரென வன்புடனே யவள்
நோக்கித், தடமதுவே தவறிவிட வந்தீரோ விங்கென்று
மடமையுள நானும்மை யுபசரிக்க வழியறியேன்
நடலையறச் சற்றிருந்து நடவுமெனப் பகர்ந்தனளே.

73. பகர்ந்தனளே பசுங்கிளிகள் பலபயிலும் மொழிபோன்
றே, அகந்தனிலே யுன்றனுக்கு மாசையதிகரித்ததுவே
இகந்தனிலே இவளையொப்போ ரில்லையெனத் தேர்ந்
துநயத், தகைமையுடன் மணந்திடலே சரியென்று
துணிந்தனையே !

74. துணிந்தவள்முன் சென்றெனக்குச் சோறுசற்றே யிடு
வையெனக், குணமுடனே யன்னளுந் தினைமாவைக்
கொடுத்தனளே, கணப்பொழுது நினையாது கைதனி
லே தந்தனையே, பணமுடையோ யென்கைகள் நடுங்
குவதைப் பாரென்றாய்.

75. பாரென்று சொன்னவுடன் பண்புடைய குறமகளுங் காரென்று கறுத்துவளை புருவமுறு முகந்தாழ்த்தி நீரென்ன சொல்லுகிறீர் நினையாதே யிங்குநின்று போரொன்று விளைந்திடவோ பொருந்தினீ ரெனக் கேட்டாள்.

76. கேட்டபொரு ளறியாத மடமையுடைக் கிழவனைப் போல் ஊட்டுகென வுரம்பயின்ற வுன்வாயைத் திறந்த னையே, காட்டினிடை யிதுவென்ன புதுமையெனக் கலங்கி நின்று, வாட்டமுடன் வாய்தனிலே தந்தனளே யூட்டமுதை.

77. ஊட்டமுதை விழுங்கிடவே யுதவாமல் விழிப்பவன் போல், காட்டினையே கண்டமதைக் கைகொண்டு கன முறவே, நாட்டமதோ நன்னீரும் பருகிடவே யென மொழிந்து, கூட்டமர நடுநின்ற குளமதனைக் காண் பித்தாள்.

78. காண்பிக்கக் கண்மணியே தண்ணீரைக் குடித்திடவே, ஆண்மைகுறை யான்சென்று லதில்விழுந்து மரித்திடு வேன், பூண்பொலியு நினதுகையால் புனிதமிகு மந் நீரை, எண்மிகுநீ யெடுத்துவந்து வார்த்திடுவை யெனமொழிந்தாய்.

79. மொழிந்ததனைக் கேட்டவுட னுளநடுங்க முகங்கோ ணிப், பழிவருமோ வெனவஞ்சிப் பாவையவள் நீர் கொணர்ந்து, வழிந்திடுமுன் வாய்தனிலே விடுகின்ற தருணமதில், தழுவிடவே யவள்மீது தள்ளாடி விழுந்த னையே.

80. விழுந்தவுட னன்னவளும் வீணனேநீ யென்றுசொலிக்
கிழிந்ததன தாடையினைக் கிரமமுடன் சேகரித்தே,
அழுந்திடவோ வுன்றனக்கே யகந்தைவந்த தெனப்
புகன்று, கழுந்தனையாய் கணப்பொழுதிற் சென்
றிடுவை யெனவெகுண்டாள்.

81. வெகுண்டவளை வசப்படுத்த வேறுவழி காணுது
வெகுபலஞ்சா ரண்ணனையே மனமதனில் வேண்டி
நின்ருய், தகுந்தவர்கள் தனையடையக் காத்தருளுந்
தந்திமுகன், பகடுருவந் தான்தாங்கிப் பைந்தொடி
யாள் முன்புவந்தான்.

82. வந்தபெரு யானையினை வனிதையுமே கண்ணுற்ருள்
ஐந்துபொறி யுந்நடுங்க வையாநீர் கதியென்னச்
சொந்தமுட னென்றனக்கே மணமாலை சூட்டுவையேல்
இந்தப்போ தின்றனக்கே யுதவிசெய்வ தெனப்புகன்
ருய்.

83. புகன்றமொழி செவிபுகலும் பூங்கொடியாள் மனங்
கலங்கிச், சகந்தன்னைப் புரந்தளிக்குஞ் சண்முகனே
யின்னருளோ, மகிதன்னில் மங்கையர்க ளிங்ஙனமோ
வருந்துவது, சகிதெய்வ யானையுடன் சார்ந்தவனே
யெனவிறைஞ்சி,

84. எனவிறைஞ்சி யீசனடி யிதயமலர் தனிலிருத்தித்
தனையளிக்குஞ் சோதரரைக் காணுது தத்தளித்துக்
கனம்வளரும் பெரியவரே கதியற்ற வெனைக்காக்க
மனம்போல மங்கலமே நடத்திடுவீ ரெனப்பணிந்தாள்.

85. பணிந்தணைதயே பரமனருள் முதற்சேயுங் கண்டுவந்து
தணிந்துநின்ற தம்பியையுந் தழைத்திடநல் வரமளித்
துக், குணமுடைய கொடிபோல்வாள் சிறந்திடவு முண்
ணினைந்து, கணஞ்சூழக் காட்டினிடை மறைந்துசெல
மனங்கொண்டான்.

86. மனங்கொண்டு வாயுவினு மதிவேக மாயகலத்
தினைகாக்குந் தெரிவையிட முன்னுருவைக் காட்டி
னையே, கனம்வளருங் கத்தரிப்பூக் காதுடைய சீமா
ட்டி, உனதடியிற் பணிந்துமிக வுளமுருக வியந்
துரைப்பாள்.

87. வியப்பலவோ வடிவேலா வேட்டுவள்முன் நிற்பதுவும்
பயப்படவே பண்புடைய கயமுகனை யழைத்ததுவுந்
துயர்ப்பட்ட நான்தானே தூயவடி தனைவேண்ட
நயப்புடனே நன்மணமுஞ் செய்வனென நவின்ற
னையே.

88. நவிலுகின்ற மணந்தனையே நானுடைய வுரியவனோ
சிவனருளாற் றிருக்கங்கை தனில்வளர்ந்த சீமானே
புவிதனிலே புனிதமிலாக் குறக்குலத்தில் வந்தவள்
யான், தவறுசெய்யத் தாங்கள்மனங் கொளவேண்டா
மெனப்புகன்றாள்.

89. புகலுமே புன்னகையோ டெழிலொழுகு முகம்விளங்
கப், புகழுடைய வென்றந்தை பொருந்தியது மலை
யலவோ? சகம்படைத்த வென்றாயுந் தண்ணிமய மக
ளலவோ? அகந்தனிலே யாய்ந்துரைநீ யசலநங்கா
யெனக்கேட்டாய்.

90. கேட்டவுடன் கிளிமொழியாள் நிலநோக்கி நின்றிட லும், நாட்டமுட னவள்கையை நல்லதென்றே சிறை கொள்ளக், காட்டினிடைச் சென்றுள்ள வேடுவருங் கடுகிடுவர், காட்டவொணு வோர்வேடங் கருதுக வென் றடிபணிந்தாள்.

91. பணிந்தசிறு பாவையினைப் பாசமுடன் கடைக்கணித் துத், துணிந்துடனே வேங்கையுருத் துரிதமுட னடைந்துவந்தாய்; குணிதாங்கும் குறவர்களு நிமிட மதிற் குடிலடைந்தே, யணங்கின்கை யமுதருந்திக் காட்டின்க ணகன்றனரே.

92. அகன்றவுட னகமகிழ்ந்தே யவள்தன்னைக் கைக் கொண்டு, சகந்தனிலே தனையொப்போ ரில்லையென நீநடந்தாய்; அகந்தனிலே காணுதே யவளுடைய சோதரரும், உகமுழுதுந் தேடவென வுண்ணினைந்து வெளிவந்தார்.

93. வெளிவந்த வேடுவரும் வேங்கையினைக் காணுதே
தெளிவந்த தேயென்று சித்தமது மிகக்கலங்கி
அளிகொண்டே யவள்தனையுங் கண்டிடவே மனங் கொண்டு, முளைதாங்கு மலைபலவுந் தாண்டினரே முன் வசவே.

94. முன்வந்த வேடர்களை முறிக்கின்றே னென்றுசொல்லி யுன்கையின் வேல்தனையே யொளியுறவே பிடித்து நிற்க; மின்பழிக்கு மேனியவள்ளி கைபிசைந்து மொழி குளறி, என்குலத்தோ ரிவர்தமைபோ சங்கரிப்ப தெனத்தடுத்தாள்.

95. தடுத்தவுட னவருண்மை தாமறிய மனம்விரும்பிக்
கொடுத்தனரே குயிலபயிலு மங்கையினை யுன்றனக்கே;
மடுத்தவருள் வானவரும் மாநிலத்தி லுயர்ந்தவரும்
பிடித்தனரே யுன்தாளைப் பிழைபொறுக்கு மிறைவ
னென்றே.

96. இறையவனே யிப்படியே வெற்றியுடன் வாழ்நீயுந்
தரையிலுளோர் மதகரிக்குஞ் சறுக்கிடுமே யடியென்ற
அறிவுதனை யடையவன்றோ வந்நாளில் மனமுவந்து
பரமனது கரமிருந்தே யிழந்தனையோ பழந்தனையும்.

97. பழமிழந்த பழிதனையே பறக்கடிக்க மனநினைந்தோ
பழனிமுதல் மலைபலவும் பரமனுனக் களித்தானோ?
பழமையுறு பங்கதனை விடுத்தனனோ வுன்தமையன்?
பழமலைவா முன்தந்தை பட்சமுடன் கொடுத்தனனோ?

98. கொடுத்திடுவாய் நின்னருளைக் குவலயத்தோ ருய்ந்
திடவே, விடுத்தவொரு வேல்கொண்டு வெற்றியடை
விறல்வீரா, தடுத்தெனையே யாட்கொள்வாய் கணிகை
மலைப் பெரியவனே, அடுத்தவரை யன்புடனே காக்க
வரு சிவனர்சேயே.

99. சிவன்சேயே சீவர்களின் சித்தமதி லமர்ந்துறைவாய்,
பவபாசம் பற்றுத பண்புடனே வரமளிப்பாய்,
தவமகிமை மிகவுன்னத் தண்ணருளைத் தந்துவப்பாய்,
அவமதிலே யான்மாக்க ளலையாதே யருள்புரிவாய்.

100. அருள்புரிவா யன்புடன்வான் தருப்போலுந் தன்னி
யனே, திருவுறவே செழித்தோங்குஞ் செந்தில்வளர்
கண்ணியனே, பருமலைகள் பலவிடத்தே பொருந்தி
நடம் புரிபவனே, வருபிறவி துடைத்துநின்று வர
மளிப்பை வடிவேலா.

வாழ்த்துக்கவி.

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆகம வேதபு ராணமதறைகிற அந்தணர் தாம்வாழி,
பாகுடன் போகமும்பெற்றிட வீறுடன் பாரிலுளோர்வாழி,
தாகமே மீறிடத் தந்திடு மீரலந் தாதியு மேவாழி,
சேகவன் செங்கையிற் றாவொளி தந்திடச்சேர்ந்துறை
[வேல்வாழி.

சுபம். சுபம். சுபம்.

அரும்பதவுரை.

அந்தாதியென்பது - ஒருசெய்யுளின் ஈறுனது அடுத்த செய்யுளின் முதலாக வரப் பாடுவது.

(1) சடிலம் - சடை. துடி - உடுக்கை. களிறு - விநாயகர்.

(2) சேய் - குமாரன். விறல் - பராக்கிரமம், வெற்றி. அரக்கர்களை அதஞ்செயவே அன்றுதித்த விறல்வீரா எனக் கூட்டுக.

(3) தரு - விருட்சம். உன்ன - கருத.

(4) குழவி - குழந்தை.

(5) எறுமயில் - ஆண்மயில்; அல்லது, சிறந்தமயில். மாறுபடு - பகைமைபொருந்திய. குன்று உருவ - அசுரரூபமாகிய கிரௌஞ்சமலை ஊடுருவித் துளைபட.

(6) ஒண்டொடியாள் - ஒளிபொருந்திய தொடியென்னும் வளையை அணிந்தவள். உம்பர் - தேவர். தினகரன் - சூரியன். வாய்ந்தோய் - பொருந்தியவனே.

(7) உய்ந்திட - உஜ்ஜீவிக்க; கடைத்தேற.

(8) எழில் மருங்கில் - அழகிய இடையில். தோட்டி - அங்குசம், மாவெட்டி. தும்பி - யானை. மறை - வேதம். வண்மை - ஈகைத்தன்மை.

(9) பிறிது ஒருகை - மற்றொரு கை. பரிசு - நற்குணம். பிறங்கி - விளங்கி.

(10) அணி மார்பில் அமர்ந்து உறைய - அழகிய மார்பிற் பொருந்தியிருக்க. இங்கிதன் - இனிய குணமுடையவன்.

(11) குருதி - இரத்தம். களவேள்வி - போர்க்களத்தில் பகைவரைக் கொன்று வென்றவர் புரியும் சடங்கு; இது யாககாரியமாகக் கருதப்படும். வேள்வி - யாகம்.

(12) மடமை - அறியாமை. மாந்தர் - மனிதர். அடல் ஏறே - வலிய ஆண்சிங்கம்போன்றவனே.

(13) தருமாரி என்பதை மாரிதரும் என மாற்றுக; மழையைத் தரும் என்பது பொருள். தப்பீடல் - மழைபொழியாமல்

தவறுதல். பரு மாரி - மிக்க மழை. கரு உடைய - பூர்ணகர்ப்பங் கொண்ட; என்றது, நீர்கொண்ட என்றவாறு. கார் - மேகம்.

(14) குறமகள் - வள்ளியம்மை. பற்று - இச்சை. பேதையர் - மூடர். மாலுமி - கப்பலோட்டி.

(15) மால் உலகாள் - பெருமைபொருந்திய தேவலோகத்தவள்; இது, தெய்வயானையைக் குறிக்கும். எலுகின்ற - இயல்கின்ற; (செய்யக்) கூடிய. பணிகள் - தொழில்கள். ஞாலம் - பூமி.

(16) பைந்தொடியர் - பசும்பொன்னலாகிய தொடியை யுடையவர். சீராளா - சிறப்புடையவனே. தன்னியன் - பரிசுத்தன்.

(17) ஒன்னலர் - பகைவர். பன்மை இதழ் - பல (மலர்) இதழ்கள். துன்பு விளை - துன்பஞ்செய்கின்ற.

(18) அரன் - பரமசிவன். பண்புடன் - குணத்துடன். இறைவன் - கடவுள். ஆடல் முறை - கொல்லும் முறைமை. நாடினார்- கருதினர்.

(19) வேடினர் - வேண்டினர்; வேடினரென்பது, தெலுங்கு நாட்டுச்சொல், எதுகைநய நோக்கி இது வந்தது. மோடி - மாறுபாடு, மேட்டிமை.

(20) கொண்டனர்வகை என்பதைக் கைக்கொண்டனரென மாற்றுக. விண்டனர் - சின்னபின்னஞ்செய்தனர். வெற்றியுறு நற்றவத்தை, பிராசநயங்காண்க. பிழைத்தனர் - வாழ்ந்தனர்; குற்றம்புரிந்தனரென்னும் பொருளுங் கொள்க.

(21) தமது ஆணைக்குள் கொணா - தமது கட்டளைக்குள் கொண்டுவர. இழைத்திடுக்கண் என்பதை இடுக்கணிழைத்து என்று சேர்த்துப் பொருள்காண்க; துன்பம்புரிந்து என்க. நகை புரிந்து - பரிகாசஞ்செய்து.

(22) சமர் புரிய - யுத்தஞ்செய்ய. தளம் - சைனியம். தகைமையுடன் - உதாரகுணத்துடன். மூன்றும்அடியில்களம் - போர்க்களம்- நான்காம் அடியில் களம் - கழுத்து. கறை - விஷம். களந்தனிலே கறையுடையோன் பங்கினள் - பார்வதிதேவி; பரமசிவனது இடப்பாகத்தில் அமர்ந்திருப்பள்.

(23) வியப்படை - பெருமைபொருந்திய ஆயுதம். மால் - மகாவிஷ்ணு. திருமால் முருகக்கடவுளின் மாமனென்பது அறிக. கால் - காற்று. ஆல் என்று - ஆலமரம் நிழல்தந்து காத்திடுவது போல என்க.

(24) இருள்தனையேஎன்பது சந்தியால் இருடனையே என வந்தது. கடமை - நூல்முறை.

(25) கடுகி - விரைந்து. கார்த்திகேயன் என்பது முருகக்கடவுளின் திருநாமம்; அது இங்குத் திரிந்து கார்த்திகையா எனவந்தது. மருகன்-சகோதரியின் மகன். பதி-ஸ்தலம். பதியான-திவ்ய ஸ்தலமான. சீரலைவாய் என்பது குமரக்கடவுளின் படைவீடுகள் ஆறில் ஒன்றாகிய திருச்செந்தூர். பரம்பொருள்-மேலான கடவுள்.

(26) பரங்குன்றம் - திரும்பரங்குன்றம்; இதுவும் படைவீட்டில் ஒன்று. மயிலை - மயிலாப்பூர். மணவாளா - கல்யாணஸம்பன்னனே. சரம் - மலர் மாலை. தணிகை - திருத்தணிகை. உரம்-ஞானபலம். ஒற்றி - திருவொற்றியூர் என்னும் தலம். உறை - வசிக்கின்ற. ஒண் பொருள் - சிறந்த பொருள்.

(27) கதிர்காமம், பெரும்பற்றப்புலியூர், பழனி, ஏரகம் இவை - சுப்பிரமணிய ஸ்தலங்கள்.

(28) உதிர்சோலை - பழமுதிர்சோலை என்பதன் முதற்குறை. சங்கீதமென்பது எதுகைநயம்நோக்கி சங்கிதமென வந்தது. தஞ்சை - தஞ்சாவூர் என்பதன் மரூஉமொழி. அலையுண்ட - கடலலைநீரை உட்கொண்ட. புனிதம் - பரிசுத்தம்.

(29) சுவாமிமலையென்பது - கும்பகோணத்திற்கு அருகிலுள்ள ஓர் சுப்பிரமணிய ஸ்தலம்; இங்கு, முருகக்கடவுள் பரமசிவனுக்கும் பிரணவமந்திரத்தின் பொருளை விவரித்தாரென ஓர் ஐதிஹ்யம் உண்டு. வதிந்தவன்-வஸித்தவன். சலந்தனிலே - (தாமிரபர்ணிநதியாற்றின்) நீரினிடையில். குறுக்குத்துறையென்பது - திருநெல்வேலியையடுத்துள்ள முருகக்கடவுளின் கோயில். துறைத்துறையே என்னும் நயங்காண்க.

(30) துறை - அகப்பொருள் புறப்பொருள் துறைகள்; அன்றி, பலவகையான எனினும் அமையும். மலரவன் - தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன். தற்பரன் - மேலானதினும் மேலானவன்; தத்பரன் என்பதன் திரிபு.

(31) தஞ்சம் - அடைக்கலம். பொற்பு உற - அழகாக. சுரர் வேந்து - தேவசேனாதிபதி; முருகக்கடவுள்.

(32) சூரபத்மர் - சூரன், பத்மன் என்னும் இரண்டு அசுரர்கள். இழைத்திடும் - செய்யும். சொலித்திட - விளக்கமுற.

(33) ஈடு - ஒப்பு. படம் - வஸ்திரம்; இங்கு, கொடிச்சீலைகளை உணர்த்தும்.

(34) தடந்தோள் - பெரிய புயம். பார் தாங்கும் பாம்பு - பூமியைச் சுமந்துகொண்டிருக்கும் ஆதிசேஷனென்னும் சர்ப்பராசன். இடியேறு - பேரிடி.

(35) தலமுழுதும் - பூமிமுழுதும், தகர்ந்தது - உடைந்தது. திலம் - எள். வழங்க - இட. வறிது ஆக - இல்லாமற்போய்விட.

(36) வரம்பு ஒன்றுமில்லாது - எல்லை சிறிதுமில்லாமல். சரம் - அம்பு. திறம் - வலிமை; பராக்கிரமம். தென்னவன் - தெற்குத்திசைக்குப் பாலகனுன யமன். யமனைக் கண்டனரென்றது இறந்தனரென்றவாறு.

(37) அலகை - பேய். துண்டம் - துண்டு. தம் தமரை - தமது உறவினரை. திண் தோள் - வலிய புயம். உண்ணுவதை, கொள்ளுவதை, போகுமதை, தழைப்பதைக் கண்டனரெனக் கூட்டுக.

(38) அழல் - நெருப்பு. நீர்நிலைகள் - குளங்கள்முதலியன. தினகரன் - சூரியன்.

(39) மாற்றலர்கள் - பகைவர்கள். மனம் இடிந்ததென்க.

(40) அரு மருந்தும் - அருமையான தேவாமிருதம்போன்ற குமரக்கடவுளும். ஊறு - தீங்கு. மடிவிர் - மடிவீர். ஒளிர் - விளங்குகின்ற.

(41) விண்ணோர் - தேவர்கள். நுகர் மயில் - அரவு முதலியவற்றைக் குத்தித் தின்னும் இயல்புள்ள மயில்.

(42) சூரனது ஆற்றலை அடக்கி எனப் பிரிக்க. ஆற்றல் - பலபராக்கிரமம்.

(43) நிகர்வோர் - ஒப்பவர். கைலாசம் இமயமலையின் மேலுள்ளது. சமரசம் - விருப்புவெறுப்பில்லாத இனிய தன்மை. துதிமாலை சாத்தினர் - தோத்திரப்பாமாலை சமர்ப்பித்தார்கள்; தோத்திரப்பாடல்வரிசையைப் பூமாலைபோல் இட்டனரென்க.

(44) பதுமமலர் - தாமரைப்பூ. பாரதி - சரசுவதி. மதம் மலை - மதத்தையுடைய மலைபோன்றது; மதமென்பதன் குறிப்பால் மலையென்றது (கஜேந்திரனென்னும்) யானையைக் குறிக்கும். இடர் - துன்பம். கதி - முத்தி. கஜேந்திரனுக்குக் கதியளித்தவன் திருமால். இதம் - ஹிதம்; நன்மை.

(45) பகீரதன்றன் துயரமதைத் தீர்த்தவள் - கங்கை ; பகீரதனால் பூமிக்குக் கொண்டுவரப்பட்டமைபற்றிக் கங்கைக்குப் பாகீரதி என்னும் பெயர் வழங்குவதுகாண்க ; பகீரதன் தன்முன்னோர் நற்கதியை அடையாமைக்காகக் கவலைகொள்ள, அவனது துயரைத் தீர்த்தற்பொருட்டுக் கங்கை பூமிக்கு வந்தனளென்க. மதியை - சந்திரனை. மதியை முடியிற் சூடிக்கொண்டுள்ளமையால் சிவபிரான் சந்திரசேகரன் எனப்படுவர். தார் வேந்து - (கற்பகமலர்) மாலையைத் தரித்துள்ள தேவராஜனை இந்திரன். தாரணி - தரணி என்பதன் விகாரம் ; பூமியென்பது பொருள்.

(46) வனப்பு - அழகு. தொடை - தொடுக்கப்பட்டது ; மாலை.

(47) பறவைகள் - மயிலும், சேவலும் ; மயில்வாகனம், சேவற்கொடியென்க. கயம் - கசம் ; இஃது, இங்கு, சரவணப் பொய்கையைக் குறிக்கும். சண்முகன் - அறுமுகக்கடவுள்.

(48) குவலயத்தோர் - நிலவுலகத்தவர். களி கூர்ந்திட - மகிழ்ச்சி மிகுதியாக. விதித்தனர் - ஏற்படுத்தினர். ஆறெழுத்தை மனத்திற் பதித்தனரென்க. ஆறெழுத்து - முருகக்கடவுளின் திருமந்திரம்.

(49) இதுவும், அடுத்தசெய்யுளும் ஷண்முகமந்திரத்தை ஜபித்தலால் ஆகும் பயனை விவரிக்கும். அகந்தை - செருக்கு. பேரவை - பெரிய ஸபை.

(50) சீறி - கோபித்து. விலங்கினம் - புலி கரடி முதலிய மிருகங்களின் கூட்டம். நலம் உற - நன்மை பொருந்த. பிறழாது - தவறுமல். மன்றில் - சபையில் ; பொன்னம்பலம் வெள்ளியம்பலம் முதலிய ஸ்தலங்களில். நடம் - நர்த்தனம். மன்னவன் - தேவர்கட்கெல்லாம் தலைவன். மன்றில்நடமாடுகின்ற மன்னவன் - பரமசிவன்.

(51) மருள் - மயக்கம், அஞ்ஞானம்.

(52) பெரும்போர் என்றது - சூரபதுமர் முதலியவர்களோடு புரிந்த யுத்தம். தேவர்களின் அதிபதி - இந்திரன். திரு நிகர் - இலக்குமிக்குச் சமானம். தெய்வானை - தெய்வயானை என்பதன் திரிபு.

(53) துடி யிடையை - உடுக்கைபோலும் இடையையுடையவளை. புனைந்து - சூட்டி. தயாபரர் - அருள்சிறந்தவர்.

(54) பவம்வினை - பிறப்பிற்குக் காரணமாகிய கருமம்.

(55) புனிதம் - பரிசுத்தம். சேவகன் - வீரன். அகம் விழைவால் - மனவிருப்பத்துடன். இக பரத்தில் - இம்மையிலும் மறுமையிலும்.

(56) சதுமுகன் அதனைச் செவியுற்று என்வுரைத்தான் என முடிபுகாண்க. சதுமுகன் - நான்முகனாகிய பிரமன். மகிதனிலே - பூமியில்.

(57) முனிந்து - சினங்கொண்டு. புரம்எரித்தவன் - திரிபுர சங்காரம் செய்தருளிய சிவபிரான். ஆர்ப்பரித்து - ஆரவாரஞ் செய்து.

(58) மேட்டிமை - கருவம். வீட்டினின்று - பிரமனது வீடாகிய சத்தியலோகத்தினின்று.

(59) பொருமி - கலங்கி. சாமி என்பது முருகக்கடவுளைப் பற்றிய விளி. தாரணி - தரணி; பூமி. முத்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல். நேமி - சக்கராயுதம்; அல்லது, தரும சக்கரம். காமியம் - விரும்பும் பேறுகள்.

(60) இருவர் - சிவனும், விஷ்ணுவும். கடுகி - விரைந்து. மாற்றுகென்ன என்பதை, மாற்றுக என்ன என்று பிரித்துக் கொள்க. ஓங்காரம் என்பது - ஓம் என்னும் பிரணவமந்திரம்: அறையும் - சொல்லுங்கள். திகைத்தனர் என்பதற்குச் சிவவிஷ்ணுக்கள் என்னும் எழுவாய் வருவிக்க. ஓவியம் - சித்திரத்தில் தீட்டிய வடிவம். திகைத்தனர் - பிரமித்துச் செயலற்று நின்றனர்.

(61) அகம் துயர் ஆர் அயன்றனை - மனத்தில் துக்கம் பொருந்திய பிரமனை. ஒரெழுத்து என்றது பிரணவமந்திரத்தை.

(62) நாயகர் - முத்தொழில்புரியும் மூவர்.

(63) தவப்புருடன் நாரதனும் எனக்கூட்டுக. புந்திமையினை அவிழ்த்தனன் என்க.

(64) நாரதரது உரையை இதுமுதற் சிலசெய்யுள்களிற் காண்க. 70-ம் செய்யுளில் இரண்டாம் அடியில் 'உரைத்திடலும்' என்பதில் முடிவுபெறும்.

(65) அகந்தனை - மனத்தை. கொள்ளுவாள் - கவர்ந்துகொள்வாள். தம் நெறி - தங்கள் யோக நெறி. அவனிமிசை - பூமியில். அவள்-அற்புதமயமானவள்; அரசர்களும் அடையமுடியாதவள் என்க. களி கூர்வர் - மகிழ்ச்சி மிகுதியாகக் கொள்வர்.

(66) கண்ணப்பன்மரபு - கண்ணப்பநாயனரது வமிசம்; என்பது - வேட்டுவக்குலம். உறைகின்றாள் - வசிக்கின்றாள். தாளின் - பாதத்தின். தளிர்பலவும் சிவந்துநின்ற என முடிபு காண்க. நின்ற - நின்றன. இயல்பில் தளிர் சிவந்துள்ளமையைக் குறித்துத் தற்குறிப்பேற்றி உரைத்த இயற்கைநயங் காண்க.

(67) அதரம் - இதழ். பவம் துடைக்கும் - பிறவித்துன்பத்தைப் போக்கும். பகருவது - சொல்வது. தவளம் - வெண்மை. தமியன் - தனியேன்; தமியனும் என உம்மைகூட்டிக்கொள்க.

(68) கண்டம் - கழுத்து. தரை - பூமியிலுள்ளோர். தெரியவொணு - தெரியவொண்ணாத. துவள் - அசைகின்ற. பரை - மேன்மைபொருந்தியவள்.

(69) நின்றனையே - உன்னையே. பிறை நுதலாள் - பிறைச்சந்திரன்போலும் நெற்றியினையுடையாள். நிதிபோன்று காக்கின்றார் என்க.

(70) கற்பகத்தை - தேவவிருட்சமாகிய கற்பகதருபோன்று வேண்டும் பேறளிக்கும் பெண்ணை. வண் தவத்தோன் - சிறந்த தவமுடைய நாரதமுனிவன்.

(71) கணக்கு ஆக - முறையாக. பேண - காக்க. எணம் - மான். எந்திழை - ஆபரணங்களை அணிந்த பெண். வள்ளியம்மை மானாற் பெறப்பட்டவளென்பது கந்தபுராணம் முதலிய நூல்களால் அறியக்கிடக்கின்றது.

(72) தடம் - வழி. மடமை - பேதைமை. நடலை - நடுக்கம்.

(73) பயிலும் - வழங்கும். நயம் தகைமையுடன் - இனிய குணத்துடன்.

(74) 'கணப்பொழுதும்....................நடுங்குவதைப்பார்' என்பது முருகக்கடவுள் கூறியது. பணமுடையோய் என்பதிலுள்ள நயம் கண்டுகொள்க.

(75) பண்பு - நற்குணம். குறமகள் - வள்ளி. கார் என்று - மேகம்போன்று. போர் ஒன்று விளைத்திடவோ - யுத்தமொன்றை மூட்டவோ.

(76) மடமை உடை என்பதில் - பேதைமையுடைய என்றும் அஞ்ஞானம் அகலச்செய்ய வல்ல என்றும் இருபொருள் தோன்றும். உரம் பயின்ற - சிறப்புப்பொருந்திய; உரம் - வலிமையுமாம். ஊட்டமுது என்பது தினைமா.

(77) நன்னீரும் பருகிட நாட்டமோ என வள்ளியம்மை வினவினள். கூட்டம் மரம் நடுவில் நின்ற - மரக்கூட்டத்தின் இடையிற் பொருந்திய.

(78) கண்மணியே என்பது வள்ளியை நோக்கிய விளி. ஆண்மை குறை யான் என்றும், ஆண்மைகுறையாள் என்றும் பிரித்து நயங்காண்க. பூண் பொலியும் - ஆபரணங்கள் விளங்கும். எண் - அழகு.

(79) பாவை அவள் - சித்திரப்பதுமைபோலும் அழகிய அப் பெண்.

(80) அழுந்திட - (பாவத்தில்) அழுந்த, என்னிடத்தில் மனமழுந்த என்னும் பொருளும் தோன்றும். கழுந்து - யானை கட்டும் தறி; இஃது, அதுபோல் வலியவனைக் குறிக்கின்றது.

(81) அண்ணன் - விநாயகமூர்த்தி. தந்திமுகன்-யானைமுகக் கடவுள். பகடு - யானை.

(82) வனிதை - பெண். ஐந்து பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.

(83) புரந்து அளிக்கும் - நன்கு பாதுகாக்கும். சகி - தோழி.

(84) ஈசன் - சிவபிரான். சோதரர் - சகோதரர்.

(85) சேய் - குமாரன். முதற்சேய் - விநாயகர். உள் நினைந்து எனப் பிரித்துக்கொள்க. கணம் - பரிவாரம்.

(86) தெரிவை - உத்தமஸ்திரி.

(87) வடிவேல் - கூரிய வேற்படை. தூய - பரிசுத்தமான. நவின்றனை - உரைத்தருளினய்.

(88) நவிலுகின்ற - (சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற.

(89) மலை - கைலாசகிரி. இமயமகள் - இமயமலையின் புதல்வி; பார்வதி என்னும் பெயர்ப்பொருள் கருதுக. ஆய்ந்து - ஆராய்ந்து. அசலம் நங்காய் - மலைநிலத்தில் வசிக்கும் பெண்ணே.

(90) நிலம் நோக்கி நிற்றல், நாணத்தினல். காட்டம் - விருப்பம். சிறைகொள்ள - பிடித்துக்கொள்ள. கடுகிடுவர் - விரைந்து வந்துவிடுவர். கருதுக - நினைந்து (வேடங்) கொள்க.

(91) வேங்கை - ஓர்மரம். குனி - வில். குடில் - குடிசை. அணங்கு - தெய்வப்பெண். அகன்றனர் - சென்றனர்.

(92) அகம் - வீடு. உகம் - பூமி.

(93) தெளிவந்தது - தெளிவாய்த் தெரிந்தது. அளி - மிக்க அன்பு. முளை - மூங்கில்.

(94) மின் பழிக்கும் - மின்னலையும் இகழத்தக்க ஒளிபொருந்திய. கைபிடித்துத் தடுத்தாள் என்க.

(95) அறிய - அறிந்ததனால். குயில் பயிலும் - குயிலின் இனிய குரல் வாய்ந்த. மடுத்த அருள் என்பதை - அருள் மடுத்த எனச் சேர்க்க.

(96) இதுமுதல் இந்நாலின் முடிவுவரை முருகக்கடவுளைக் குறித்த துதியெனக் காண்க. மதகரி - மதயானை. 'யானைக்கும் அடிசறுக்கும்' என்பது பழமொழி. முருகக்கடவுள் சிவபிரான் கையிலிருந்த பழத்தைப் பெறாதுபோன கதையைக் கேட்டறிக.

(97) சிவபிரான் தனக்குரிய மலைகள்பலவற்றைத் தன் மூத்த குமாரனாகிய விநாயகர்க்கு அளிக்காமல் இளையவனாகிய முருகர்க்கு அளித்தாரென்று இங்குக் கூறப்பட்டது. பழமலை - விருத்தாசலமென்னும் சிவஸ்தலம்.

(98) விடுத்த - பிரயோகித்த. தடுத்தாட்கொள்வான் எனச் சிவபிரானைத் தொண்டர்கள் பாராட்டியுரைப்பார்.

(99) பற்றாது - பிடித்துப் பீடிக்காமல். அவமதிலே - வீணிலே.

(100) வான் தரு - தேவலோகத்துக் கற்பகவிருக்ஷம். முருகக்கடவுளின் படைவீடுகள் - திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை. நடம் - திருநடனம்; திருவிளையாடல். 'வடிவேலன்' என முதலில் தொடங்கியது ஈற்றுச்செய்யுளின் ஈறாகவும் அமைந்துவந்தமை காண்க; இதுவும் அந்தாதிக்கு உரிய லக்ஷணமாகும்; இதனை, 'மண்டலித்தல்' என்பர்.

ஜ்ஞேபகாரி = = = = பிரசுரங்கள்.

ஔவை.

நம் அருந்தமிழ் மொழியிற் சிறந்த நீதி நூல்களையும் தனிப் பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம்; பல நூல்களைத் தழுவியும், புலவர்களின் கர்ண பரம்பரையை அனுசரித்தும் வேலூர் வூரீஸ் காலெஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் இனிய எளிய வசன நடையில் இயற்றப்பட்டது. சிறுவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்து கொள்ளக்கூடியது. வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது ... விலை அணா 6.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவரபக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக்கவிஞருமாகியகாரைக்காலம்மை என்னும் புனிதவதியாரது இனியசரித்திரம். சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த பெரியபுராணத்தில் உள்ளபடி எளிய நல்ல வசன நடையில் இயற்றப்பட்டது. விலை அணா 1.

குகப்பெருமாள்.

இது ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் அயோத்தியாகாண்டத்தில் கங்கைப்படலம், குகப்படலம் என்னும் பாகங்களில் காணப்படும் இனிய சரித்திரமாகும். ஸ்ரீராமபிரான் சீதாப்பிராட்டியா

ரோடும், இலக்குமணனோடும் பித்ருவாக்கிய மாதருவாக்கிய பரிபாலனத்தின்பொருட்டு அயோத்திநகரம் நீங்கிக் கங்கைக்கரையை அடைந்தவளவில் இனிய குணமுடைவனாகிய குகன் என்னும் வேடர் தலைவன் அவரைச் சந்தித்து நேயம் மிக்கதும் ஸ்ரீராமன் அவனை இனிதின் ஏற்றுத் தோழனென்றும் சகோதரனென்றும் பாராட்டி அன்புகூர்ந்ததும், ஸ்ரீராமபிரானைக்காணப் பரிவாரத்துடன் வந்த பரதனை அக்குகன் இராமனிடத்துக்கொண்ட கனிந்த அன்பினால் மாறாகக் கருதிப் போர்க்குச் சித்தனானதும், பின்பு அவன் பரதனை உள்ளபடி அறிந்துகொண்டு மனமுருகியதும் முதலிய விஷயங்கள் அடங்கிய சிறந்த கதையாகும். நற்குணமுடைமையே உயர்ந்த ஜாதிக்கு லக்ஷணமென்பதும், அஃதின்மையே கீழ்ச்சாதிக்கு லக்ஷணமென்பதும், மற்றைப்படி பிறப்பினால் சாதியென்பது சரியன்றென்பதும் முதலிய நீதிகளை விளக்கிக்காட்டுவது. சிறுவர் சிறுமியர் ஆதி எல்லோரும் படித்து சந்தோஷமடையும்படி இனிய எளிய வசனநடையில் இயற்றப்பட்டது, கிளேஸ் கடிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

விலை அணா 3.

சீதை வனம்புகுந்த சரிதம்.

இது, கம்பராமாயணத்தில் இறுதியிலிருப்பதும், உத்தமகவியாகிய ஒட்டக்கூத்தப்புலவர் பாடியருளிய உத்தரகாண்டத்தில் உள்ளதுமான "சீதை வனம்புகு படலம்" என்னும் பாகத்தில் அடங்கிய சரித்திரத்தை எளிய வசனநடையில் வெளியிடும் நூல்; ஒன்பது சுவைகளில் மிகு நலம் பெறுவிக்கும் கருணாரசம் அல்லது சோகரசத்தை உண்டாக்குவது; உலகத்தோடு ஒட்ட ஒழுகவேண்டுமென்பதும், எதிர்பாராமல் இடர்வருதல் இயல்பென்பதும், அதனை பொருத்துக்கொள்ளவேண்டுமென்பதும், கற்புடைய மகளிர் தமக்குத் தயர்தரினும் கணவரைப் பழியாது பத்தி செய்து அவரைக்குறித்துத் தவம்புரிவரென்பதும் பிறநீதிகளும் விளக்குவது. ஆண்மக்களும், முக்கியமாகப் பெண்மக்களும் படிக்கவேண்டுமென்றே இந்நூல் எழுதப்பட்டது. நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டது ... ... விலை அணா 3.

தமிழ் நாவல்களும், நாடகங்களும்.

	ரூ.	அ.
வ[redacted]ரம் ...	1	0
கமலாவினி ...	1	0
சாணக்கிய சாகஸம் ...	1	0
அமீர் ஸிங் ...	0	12
தனபாலன் முதற்பாகம்	0	12
டை 2-ம் பாகம் ...	0	12
இராம லீலை ...	0	12
குணசீலன் ...	0	10
புஷ்பவனம் ...	0	10
மாலினி மாதவம் ...	0	10
ஒற்றன் ...	0	10
கமல பவனு ...	0	10
மனோரமா ...	0	8
ஞானசுந்தரம் ...	0	8
வனஜாக்ஷி ...	0	8
ராஜாமணி ...	0	8
ஆரிய குமாரி ...	0	6
ஸாதனு	0	6
ஆஸ்திகோபாக்கியானம்.	0	5
அன்புக்கும் அழிவோ? ..	0	5
கலிஞகஷி ...	0	5
ஸரோஜா ...	0	5
கமலவதனு ...	0	5
கமலாம்பிகை ...	0	4
ருக்மணிபரிணியம் ...	0	4
கருணாகரன் ...	0	4
காதல் வெற்றி ...	0	4
ஸர்தார் ஸிங் ...	0	3
விளையல் உடன்பாடு ...	0	2
கைப்பைத்தியம் ...	0	2

	ரூ.	அ.
ஸலேஸமிரா ...	0	2
பெற்றமனம் பித்து ...	0	2
குசேலர் (கலிகோ) ...	1	4
டை ஸாதாபயிண்டு.	1	0
அமலாதித்யன் ...	1	0
ஸ்வர்ணகாந்தி ...	1	0
கண்ணகி ...	0	14
லீலாவதி சுலோசனை ...	0	12
சத்ருஜித் ...	0	12
மனோகரன் ...	0	12
சிம்ஹளநாதன் ...	0	12
காதலர் கண்கள் ...	0	12
விஜயரங்கம் ...	0	12
புஷ்பவல்லி ...	0	12
ரத்னுவளி ...	0	12
ஸத்ய விஜயம் ...	0	10
பேயல்ல பெண்மணியே.	0	8
நற்குல தெய்வம் ...	0	8
பிரஹசனங்கள் ...	0	8
சாரங்கதரன் ...	0	8
'முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்' ...	0	8
சால்வரிஷி ...	0	8
யயாதி	0	8
ரஜபுத்ரவீரன் ...	0	8
சிறுத்தொண்டர் ...	0	8
ஊர்வசியின் சாபம் ...	0	8
வேதாள உலகம் ...	0	8
திருமயிலை ஸேதுபதி ...	0	8
ஸத்திய ஹரிச்சந்திரன்.	0	6

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	10	பிறவிநோய் ...	பிறவியறத்
4	8 & 9	கண்னுடையாள்	கண்ணுடையாள்
12	13	செய்துவருத் ...	செய்துவருந்
13	25	ருள் ...	ருள்,
14	23	பணமுடையோர்	பணமுடையோ
15	6	மடமையுடைக்	மடமையுடை
15	7	போல்	போல்,
22	23	ஆனைக்குள்	ஆணைக்குள்
23	8	திரும்பரங்குன்றம் ...	திருப்பரங்குன்றம்.

தோத்திரப் பாமாலை.

எல்லாம் வல்ல இறைவனே கர்த்தாவாகையால் { (1) எச்சமயமும் மெய்ச்சமயம், (2) எம்மதமுஞ் சம்மதம்,

என்பதையே அடிப்படையாகக்கொண்டது:

இந்நூல் ஸ்ரீகாசி, காஞ்சி, மதுரை, அரங்கம், வேங்கடம் முதலிய தலங்களிலும் வேறு பல தலங்களிலும், எழுந்தருளியுள்ள பெருமான்களின்மீது பலவகையாப்புக்களால் ஆன்றபொருட் சுவையோடு இன்பச்சுவையும் பத்திச்சுவையுஞ் சொட்டச் சொட்டத் தோத்திரங்களாகச் செய்யப்பட்டுள்ளது.

'எம்மதமுஞ் சம்மதம், எச்சமயமும் மெய்ச்சமயம்' என்பதே அடிப்படையாயினும், கற்புடைப்பெண்டிருக்குத் தம் நாயகன் மாட்டு விசேஷித்த அன்பும் மற்றவர்பால் வேறுவித அன்பும் உண்டாவது சகசமாமேபோல் ஆசிரியர் தம் ஆத்மார்த்த கடவுளாகிய ஸ்ரீ முருகபிரானின்மீது திருச்செந்தில், திருப்பழனி முதலிய தலங்களுக் குரித்தாகக் கூறியுள்ள தோத்திரங்கள். விசேஷித்த சுவைகளைப் பயக்குந் தன்மையவென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இவ்வரிய நூலின் விலை அணா 6 தான்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

புஸ்தக வியாபாரிகள்,

135, தேவராஜ முதலி தெருவு, மதராஸ்.

ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவரும் சிறந்த பல சித்திரப்படங்கள் அடங்கிய ஓர் தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இதில், கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில். கூட்டுறவு ஆகிய இவைகளைக்குறித்த பல விஷயங்களும், ஜனஸமூஹத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்களும், சிறந்த நீதிகளைப் போதிக்கவல்ல நாவல்களும், நாடகங்களும், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்களும், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்களும், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல விஷயங்களும் சிறந்த கற்றறிந்தவர்களால் மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டு வருகின்றன.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

		உள்நாடு.	வெளிநாடு.
ஒரு வருஷத்திற்கு	ரூபா	3 0 0	4 8 0
தனிப்பிரதி	,,	0 5 0	0 6 0
மாதிரி காபி	,,	0 2 0	0 4 0

சந்தாத் தொகையை முன்பணமாகத்தான் அனுப்ப வேண்டும். அல்லது முதல் சஞ்சிகையை ஒரு வருஷத்திற்கு அல்லது ஆறு மாதத்துச் சந்தாவுக்கு வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

எம்மால் பதிக்கப்படும் புஸ்தகங்கள் இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு மாத்திரந்தான் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

135, தேவராஜ முதலி தெரு, மதராஸ்.

Victoria Press, Vellore.